முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.
முன்னிலை - திரு.எஸ்.விஜய் அழகிரி, பி.காம்.பி.எல்.,
முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
2025 ம் வருடம் பிப்ரவரி மாதம் 04 ம் நாள் செவ்வாய்கிழமை
(திருவள்ளுவராண்டு 2056 – ஸ்ரீ குரோதி வருடம் - தை திங்கள் 22 ம் நாள்)

இடைநிலை மனு எண்.12/2024
அசல் வழக்கு எண்.460/2019

1. சாமியப்பன்
2. பி.எஸ்.மோன்ராஜ்
3. சரஸ்வதி
4. ரத்னாயாள்
5. பாவாத்தாள்
6. பொன்னம்மாள்
7. குழந்தையாள்
8. ஜோதிமணி
9. பி.ராஜமாணிக்கம் ..மனுதாரர்கள்/பிரதிவாதிகள் 1, 2, 6 முதல்11

// எதிர் //

1. மைனர் ஹர்சன்
அவருக்காக அவரது நண்பர் மற்றும்
பாதுகாவலர் தந்தை வழி பாட்டி
திருமதி.எஸ்.வெங்கடேஷ்வரி ..எதிர்மனுதாரர்/வாதி
2. சுமதி
3. மைனர்.மதியரசன்
4. மைனர்.கார்த்திரேசன்

இளவர்களுக்காக நண்பர் மற்றும் தாயார் சுமதி

..எதிர்மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள்

5.கே.பி.சதாசிவம் ..எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர்

24.06.2024 மற்றும் 08.08.2024 தேதிகளிட்ட இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151 ன்படி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டு, 5 வது எதிர்மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 27.01.2025 ம்தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு..பி.டி.சசிகுமார், அவர்கள் ஆஜராகியும், 1 வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.சி.சரஸ்வதி, அவர்கள் ஆஜராகியும், 2 வது எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகததால் அவரை பொருத்து ஒருதலைப்பட்சமாக உத்தரவிடப்பட்டும், 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.லோகநாதன் அவர்கள் ஆஜராகிவும், 5 வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.மாது அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>உத்தரவு</u>

5 வது எதிர்மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டுமென்று உ.வி.மு.ச. கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151 ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு.

2. <u>மனு உரையின் சுருக்கம்</u>:

மனுதாரர் இம்மனுவில் மனுதாரர் என்றும், அசல் வழக்கில் 1 வது பிரதிவாதி என்றும், மனுதாரர் இந்த மனுவினை தனக்காகவும், மற்ற மனுதாரர்களுக்காக சேர்த்து தாக்கல் செய்திருப்பதாகவும், எதிர்மனுதாரர்/வாதி பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்களுக்காக இந்த பிரதிவாதி மற்றும் இதர பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், ஆரம்பத்தில் இருந்தே எதிர்வழக்குரையில் வாதியின் வழக்கானது அவசிய தரப்பினர்களை சேர்க்காததால் பாதிக்கப்பட்டுள்ளது என்று ஆரம்பத்திலேயே கூறியிருப்பதாகவும், இந்த மனுதாரரின் கூற்றுக்கு அப்பறமும் வாதி தாவா சொத்தை வாங்கியவரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், இந்த பிரதிவாதி மற்றும் இதர பிரதிவாதிகள் தாவா சொத்துக்களின் ஒரு பகுதியை இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 2019 ஆண்டிலேயே ஒரு சதாசிவம் என்பவருக்கு தாவா சொத்துக்களில் ஒரு 95 சென்ட்டினை விற்பனை செய்திருப்பதாகவும், 21.02.2019 ம் தேதியிட்ட அந்த கிரய பத்திரத்தின் நகல் இந்த மனுவுடன் இனைக்கப்பட்டிருக்கிறது

என்றும், அதனால் மேற்படி கே.பி.சதாசிவம் அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டுமென்றும் அவரை சேர்க்கவிட்டால் பின்நாளில் பிரச்சனை எழுவதற்கு வாய்ப்புள்ளது என்றும், வழக்கு நடவடிக்கையை முடிக்க இயலாமல் போய்விடும் என்பதால் இந்த அனுமதிக்கப்பட்டு கே.பி.சதாசிவம் என்பவரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டுமென்று கூறி இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

3. 1, 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

5 வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:

மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கதக்கதல்ல. மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானவை. தாவா சொத்துக்களில் 95 சென்டினை இந்த எதிர்மனுதாரர் கிரயம் பெற்றிக்கிறார் என்பது மட்டும் உண்மை என்றும், மனுதாரர்கள் மற்றும் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் சரியான பிரதிபலன்களுக்கு 4 எல்லைகள் கண்டு இந்த எதிர்மனுதாரருக்கு விற்பனை செய்து இருக்கிறார்கள் என்றும், கிரய தேதியில் இருந்து இந்த எதிர்மனுதாரர் அந்த சொத்தின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதாகவும், அதன் பின்னிட்டு இந்த எதிர்மனுதாரர் வீட்டு மனைகளாக பிரித்து 3 ஆம் நபர்களுக்கு விற்பனை செய்து அவர்களது அனுபவத்திலும், சுவாதீனத்திலும் அந்த வீட்டு மனைகள் இருந்து வருவதாகவும், இந்த எதிர்மனுதாரர் ஏற்கனவே கிரயம் வாங்கிய சொத்தை விற்பனை செய்து இருப்பதால் தாவா சொத்திற்கும் இந்த எதிர்மனுதாரருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், அதனால் இந்த எதிர்மனுதாரர் அசல் வழக்கிற்கு அவசிய தரப்பினர் கிடையாது என்றும், மேற்படி சங்கதிகள் மனுதாரருக்கு நன்கு தெரியும் என்றும், நன்கு தெரிந்திருந்தும் அவர்கள் மேற்படி விவரங்களை வைத்து இம்மனுவை தாக்கல் செய்திருப்பதாகவும், இம்மனுவிற்கு எவ்வித நல்ல எண்ணமும் இல்லை என்பதால் இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

4. இருதரப்பிலும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் இல்லை.

5. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

6. <u>பிரச்சினைக்குத் தீர்வு:</u>

மனுதார் தரப்பில், மனுதாரர் இம்மனுவில் மனுதாரர் என்றும், அசல் வழக்கில் 1 வது பிரதிவாதி என்றும், மனுதாரர் இந்த மனுவினை தனக்காகவும், மற்ற மனுதாரர்களுக்காக சேர்த்து தாக்கல் செய்திருப்பதாகவும், எதிர்மனுதாரர்/வாதி பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்களுக்காக இந்த பிரதிவாதி மற்றும் இதர பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், ஆரம்பத்தில் இருந்தே எதிர்வழக்குரையில் வாதியின் வழக்கானது அவசிய தரப்பினர்களை சேர்க்காததால் பாதிக்கப்பட்டுள்ளது என்று ஆரம்பத்திலேயே கூறியிருப்பதாகவும், இந்த மனுதாரரின் கூற்றுக்கு அப்பறமும் வாதி தாவா சொத்தை வாங்கியவரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், இந்த பிரதிவாதி மற்றும் இதர பிரதிவாதிகள் தாவா சொத்துக்களின் ஒரு பகுதியை இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 2019 ஆண்டிலேயே ஒரு சதாசிவம் என்பவருக்கு தாவா சொத்துக்களில் ஒரு 95 சென்ட்டினை விற்பனை செய்திருப்பதாகவும், 21.02.2019 ம் தேதியிட்ட அந்த கிரய பத்திரத்தின் நகல் இந்த மனுவுடன் இனைக்கப்பட்டிருக்கிறது என்றும், அதனால் மேற்படி கே.பி.சதாசிவம் அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டுமென்றும் அவரை சேர்க்கவிட்டால் பின்நாளில் பிரச்சனை எழுவதற்கு வாய்ப்புள்ளது என்றும், வழக்கு நடவடிக்கையை முடிக்க இயலாமல் போய்விடும் என்பதால் இந்த அனுமதிக்கப்பட்டு கே.பி.சதாசிவம் என்பவரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டுமென்று வாதிடப்பட்டது.

5.2 எதிர்மனுதாரர்கள் 1, 3, 4 அவர்களது தரப்பில் இம்மனுவை அனுமதிப்பதில் ஆட்சேபனை இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

5.3 5 வது எதிர்மனுதாரர் தரப்பில், தாவா சொத்துக்களில் 95 சென்டினை இந்த எதிர்மனுதாரர் கிரயம் பெற்றிக்கிறார் என்றும், மனுதாரர்கள் மற்றும் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் சரியான பிரதிபலன்களுக்கு 4 எல்லைகள் கண்டு இந்த எதிர்மனுதாரருக்கு விற்பனை செய்து இருக்கிறார்கள்

என்றும், கிரய தேதியில் இருந்து இந்த எதிர்மனுதாரர் அந்த சொத்தின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதாகவும், அதன் பின்னிட்டு இந்த எதிர்மனுதாரர் வீட்டு மனைகளாக பிரித்து 3ஆம் நபர்களுக்கு விற்பனை செய்து அவர்களது அனுபவத்திலும், சுவாதீனத்திலும் அந்த வீட்டு மனைகள் இருந்து வருவதாகவும், இந்த எதிர்மனுதாரர் ஏற்கனவே கிரயம் வாங்கிய சொத்தை விற்பனை செய்து இருப்பதால் தாவா சொத்திற்கும் இந்த எதிர்மனுதாரருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், அதனால் இந்த எதிர்மனுதாரர் அசல் வழக்கிற்கு அவசிய தரப்பினர் கிடையாது என்றும், மேற்படி சங்கதிகள் மனுதாரருக்கு நன்கு தெரியும் என்றும், நன்கு தெரிந்திருந்தும் அவர்கள் மேற்படி விவரங்களை வைத்து இம்மனுவை தாக்கல் செய்திருப்பதாகவும், இம்மனுவிற்கு எவ்வித நல்ல எண்ணமும் இல்லை என்பதால் இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று வாதிடப்பட்டுள்ளது.

5.4 வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், 1வது எதிர்மனுதாரர்/வாதி அசல் வழக்கினை 1 முதல் 9 மனுதாரர்கள்/1, 2, 6 முதல் 11 பிரதிவாதிகளுக்கு எதிராகவும் மற்றும் இதர பிரதிவாதிகளுக்காகவும் பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்களுக்காக தாக்கல் செய்து அசல் வழக்கில் தற்போது 1, 2, 6 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் இதர வாய்மொழி சாட்சியத்திற்காக வாய்தா போடபட்டிருந்த நிலையில் மனுதாரர்கள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. மனுதாரர்கள் தரப்பில் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே தாவா சொத்தில் ஒரு பகுதியான 95 சென்ட்டினை ஒரு சதாசிவம் என்பவருக்கு 21.02.2019ல் விற்பனை செய்திருப்பதால் அசல் வழக்கிற்கு அந்த சதாசிவம் அவசிய தரப்பினர் என்று கூறப்பட்டிருக்கிறது. மனுதாரர் தரப்பில் மேற்படி சங்கதியை ஆரம்பத்திலேயே எதிர்வழக்குரை தாக்கல் செய்திருக்கும் போதே கூறியிருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. இந்த மனுதாரர்கள்/1, 2, 6 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை பார்வையிடுகையில் அதில் அசல் வழக்கிற்கு முன்பே இந்த உத்தேச தரப்பினரான கே.பி.சதாசிவம் என்பவருக்கு 21.02.2019ம் தேதியில் வழக்கு சொத்துக்களில் 95 சென்ட்டினை கிரயம் செய்து கொடுத்திருப்பதாக

கூறப்படவில்லை. மேலும் 1 வது மனுதாரர் அசல் வழக்கில் பி.சா.1 ஆக முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பபட்டுள்ளார். அவரது முதல் விசாரணையிலும் சரி குறுக்கு விசாரணையிலும் சரி தாவா சொத்தில் உள்ள 95 சென்ட்டினை மேற்படி 21.02.2019 ம் தேதியில் ஒரு சதாசிவம் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்திருப்பதாக எதுவும் கூறப்படவில்லை. எதிர்வழக்குரையில் மேற்படி பிரதிவாதிகள் பொத்தாம் பொதுவாக தாவா சொத்திற்கு அவசிய தரப்பினரை சேர்க்காததால் பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டிருக்கிறதே ஒழிய யார் யார் அவசிய தரப்பினர்கள் என்றும், அவரகளது பெயர் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. அசல் வழக்கில் வாதியான இம்மனுவில் 1 வது எதிர்மனுதாரர் இம்மனுவில் எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்திருக்கிறார். அசல் வழக்கில் உள்ள இதர பிரதிவாதிகளான இம்மனுவில் உள்ள 3, 4 எதிர்மனுதாரர்கள்/4, 5 பிரதிவாதிகள் தங்களுக்கு எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்திருக்கிறார்கள். மனுவில் 5 வது எதிர்மனுதாரரரான உத்தேச தரப்பினர் மட்டுமே ஆட்சேபனை செய்திருக்கிறார். அவரும் தான் கிரயம் வாங்கிய சொத்துக்களை 3 ஆம் நபர்களுக்கு விற்பனை செய்திருப்பதாக கூறியிருக்கிறாரே ஒழிய அந்த விற்பனை செய்த கிரய ஆவணத்தின் நகல்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் தான் வாங்கிய 95 சென்டினை வீட்டுமனைகளாக பிரித்து யார் யாருக்கு எந்தெந்த தேதியில் விற்பனை செய்திருக்கிறார் என்பதற்கு அவரது பெயர்களோ, தேதிகளோ எதுவும் கூறப்படவில்லை. 5 வது எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் தாவா சொத்தில் 95 சென்ட்டினை கிரயம் வாங்கி இருப்பதை ஒத்துக்கொண்டு இருக்கிறார். மேலும் அவரது பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் நகல் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. மனுதாரர் கிரயம் பெற்ற ரீ.ச.1360/2 ஆனது வழக்கு சொத்தாகும். அசல் வழக்கு மேற்படி ரீ.ச எண்ணில் பு.ஏ.1.77 ½ கொண்டு பூமி வழக்கு சொத்ததாக காட்டப்பட்டிருக்கிறது. அதில் இந்த மனுதாரர்/உத்தேச தரப்பினரான கே.பி சதாசிவம் 95 செட்டினை கிரயம் வாங்கியிருப்பதால் அசல் வழக்கிற்கு தேவையான மற்றும் அவசியமான தரப்பினர் என்பது தெரியவருகிறது. ஏனென்றால் தற்போது அவரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்காவிட்டால் இவ்வழக்கில் பின்நாளில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு இறுதிநிலை தீர்ப்பாணை

பிறப்பிக்கப்படும் சமயத்தில் பின்நாளில் பிரச்சனை எழ வாய்ப்புள்ளது. பின்நாளில் ஏற்படும் பிரச்சனைகளை தவிர்ப்பதற்காகவும் உத்தேச தரப்பினரான கே.பி. சதாசிவம் பெயரில் வழக்கு சொத்தின் ஒரு பகுதி கிரயம் வாங்கியிருப்பதாலும் அசல் வழக்கானது பாகப்பிரிவினைக்கானது என்பதால் சொத்து சம்பந்தப்பட்ட அனைவரும் அவசியம் மற்றும் தேவையான தரப்பினர்கள் ஆவார்கள் என்பதால் அசல் வழக்கில் உத்தேச தரப்பினரான இம்மனுவில் 5 வது எதிர்மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க உத்தரவிடுவது பின்நாளில் ஏற்படும் பிரச்சனைகளை தவிர்ப்பதற்காகவும், அது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதால் இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. அதே சமயம் இம்மனு அனுமதிக்கப்படுவதால் 1 வது எதிர்மனுதாரர்/வாதிக்கு ஏற்படும் சிரமத்தினை செலவு தொகை ஈடு செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

முடிவாக,

இம்மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரர்கள்/1, 2, 6 முதல் 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1 வது எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவு தொகையாக ரூ.2000/-ஐ 21.02.2025 ம் தேதிக்குள் செலுத்தவேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 24.02.2025.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு பின்பு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025 ம் வருடம் பிப்ரவரி மாதம் 04 ம் நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S VIJAY ALAGIRI
Digitally signed by S VIJAY ALAGIRI
Date: 2025.02.04 19:05:16 +0530

முதல் கூடுதல் சார்பு நீதிபதி,

ஈரோடு.

<u>சாட்சிய சான்றாவணப் பட்டியல்</u>

(இருதரப்பிலும் .. தாக்கல் இல்லை...)

S VIJAY ALAGIRI
Digitally signed by S VIJAY ALAGIRI
Date: 2025.02.04 19:05:24 +0530

மு.கூ.சா.நீ., ஈரோடு.